Kerala Gazette No. 34 dated 25th August, 2020.

**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-ஜி) துறை

## அறிக்கை

எண் 23606/ச. இ. ஜி. 2/2017/சட்டம். 2018 ஏப்ரல் 7

திருவனந்தபுரம், 1193 மீனம் 24

1940 சைத்ரம் 17.

2018-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,

*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் அவசரச்சட்டம் எண் 23

## 2018-ன் கோழிக்கோடு பல்கலைக்கழகம் (செனட் மற்றும் சின்டிகேட்டின் தற்காலிக மாற்றுமுறை) அவசரச்சட்டம்

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

கோழிக்கோடு பல்கலைக்கழகத்தினுடைய செனட் மற்றும் சின்டிகேட்டை தற்காலிகமாக ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு அவசரச்சட்டம்.

முகவுரை.—2017-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக (செனட் மற்றும் சின்டிகேட்டின் தற்காலிகமாக மாற்றுமுறை) அவசரச்சட்டம் (2017-ன் 24) 2017 நவம்பர் மாதம் 20-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டதாலும்;

2018-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி ஆரம்பித்து 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்கூறிய அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையின் ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கான ஒரு மசோதாவை கேரளா சட்டப்பேரவையின் 99-வது எண் மசோதாவாக வெளியிடப்பட்டிருந்த போதிலும் அது சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் இயலாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் நிபந்தனைகளை நிலைநாட்டுவதற்காக 2018-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக (செனட் மற்றும் சிண்டிகேட்டின் தற்காலிக மாற்று முறை) அவசரச்சட்டத்தை (2018-ன் 15) 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதி கேரள ஆளுநர் விளம்பர அறிக்கை செய்ததாலும்;

2018 பிப்ரவரி 26-ம் தேதி ஆரம்பித்து 2018 ஏப்ரல் 4-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையின் ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கான ஒரு மசோதாவை பதிநான்காவது கேரளா சட்டப்பேரவையின் 118-வது எண் மசோதாவாக பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் அதை சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும் இயலாமல் போனதாலும்;

இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (2)-ன் துணைப்பிரிவு (எ)-ன்படி 2018-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக (செனட் மற்றும் சின்டிகேட்டின் தற்காலிகமாக மாற்றுமுறை) அவசரச்சட்டம் (2018-ன் 15) 2018-ம் ஆண்டு ஏப்ரல் 9-ஆம் தேதி அமலில் இருந்து நின்றுவிடுவதாலும்;

மேற்கூறிய அவசரச்சட்டத்தின் நிபந்தனைகளை நிலைநிறுத்தாவிடில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதாலும்;

கேரள மாநில சட்டசபை கூட்டத்தில் இல்லாததினாலும், தான் அவசர நடவடிக்கைகள் கைகொள்ள வேண்டிய சூழ்நிலைகள் தற்போதுள்ளது என்று கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால் இந்திய குடியரசு சட்டத்தின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் படி வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச்சட்டம் 2018-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக (செனட் மற்றும் சின்டிகேட்டின் தற்காலிகமாக மாற்றுமுறை அமைப்பு) அவசரச்சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2017 நவம்பர் மாதம் 21-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

2. <u>கோழிக்கோடு பல்கலைக்கழக செனட் மற்றும் சின்டிகேட்டின் தற்கால மாற்றுமுறை அமைப்பிற்கான சிறப்பு முறை.</u>—(1) 1975-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக சட்டத்திலோ (1975-ன் 5) அதன்கீழ் உருவாக்கியுள்ள ஏதேனும் சட்ட ரீதியான ஒழுங்குமுறையிலோ அவசரச்சட்டத்திலோ அல்லது விதிகளிலோ அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் ஏதேனும் விதி நியாயத்திலோ உத்தரவிலோ என்னதான் உட்பட்டு இருந்தாலும், இந்த அவசரச் சட்டத்தின் தொடக்க நாளுக்கு முன்பு பதவி காலவரையறை முடிவடைந்த பல்கலைக்கழக செனட் மற்றும் சின்டிகேட்டின் காரியத்தில் மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் சின்டிகேட்டின் பொறுப்புகள் துணைப்பிரிவு (2)-ன்கீழ் அரசு பெயர் பரிந்துரை செய்கின்ற ஒரு குழுமம் ஆறு மாதக் காலத்திற்கோ அல்லது 1975-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக சட்டத்தின் (1975-ன் 5) ஏற்பாடுகளுக்கு உட்பட்டு செனட்டும் சின்டிகேட்டும் மறு அமைப்பு செய்வது வரையில் அல்லது அதில் எது முதலில் வருகிறதோ, அது வரை பொறுப்பில் இருக்க வேண்டும்.

(2) அரசிற்கு, அரசு அறிக்கை மூலம், மேற்குறிப்பிட்ட செனட் மற்றும் சின்டிகேட்டினுடைய எல்லா அதிகாரங்களும் நடைமுறைப்படுத்துவதற்கும் எல்லா பொறுப்புகளும் நிறைவேற்றுவதற்காக கீழே கூறப்படுகின்ற உறுப்பினர்கள் உட்பட்ட ஒரு தற்கால குழுமத்தை பெயர் பரிந்துரை செய்யப்படலாம்,-

1. சின்டிகேட்டின் எக்ஸ்-ஒபிஷியோ உறுப்பினர்கள்;

2. பெயர் பரிந்துரை செய்யப்படுகின்ற உறுப்பினர்கள்;

(i) பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு ஆசிரியர்;

(ii) பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அரசு கல்லூரியிலுள்ள ஒரு ஆசிரியர்;

(iii) பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட அரசு கல்லூரிகளில் இருந்தும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இருந்தும் ஒவ்வொரு முதல்வரும்;

(iv) பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் இருந்துள்ள இரண்டு ஆசிரியர் பிரதிநிதிகள்;

(v) பல்கலைக்கழகங்களிலுள்ளதோ பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதோஆன அரசு அல்லது அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இருந்துள்ளதோஆன ஒரு மாணவர்;

(vi) கல்விப் பிரிவில் செயல்படுகின்ற ஆறு முக்கிய பிரமுகர்கள், அவர்களில் ஒருவர் மகளிரும் ஒருவர் அட்டவணை சமுதாயத்திலோ அட்டவணை கோத்திரத்தையோ சார்ந்த நபராகவும் இருக்க வேண்டும்.

4. இரத்தாதலும் தவிர்த்தலும்.—(1) 2018-ன் கோழிக்கோடு பல்கலைக்கழக (செனட் மற்றும் சின்டிகேட்டின் தற்காலிகமான மாற்றுமுறை) அவசரச்சட்டம் (2018-ன் 15) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், மேற்கூறிய அவசரச்சட்டத்தின்படி செய்ததாகவோ அல்லது செய்ததாக கருதப்படுவதாக உள்ள ஏதேனும் காரியம் அல்லது எடுத்ததோ எடுத்ததாக கருதப்படுவதோ ஆன ஏதேனும் நடவடிக்கையோ இந்த அவசரச் சட்டத்தின்படி செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்படவேண்டியதாகும்.

பி. சதாசிவம்,
ஆளுநர்.